# மெட்ரோ ரெயிலில் பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்கிறது

## 15 நாளில் 3.75 லட்சம் பேர் பயணம்

சென்னை, அக். 16–

மெட்ரோ ரெயில் சேவை கடந்த மாதம் 7–ந் தேதி தொடங்கியது. மின்சார ரெயில் சேவை இல்லாததால் கூட்டம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

### வருவாய் குறைவு

ஆனால் குறைந்த அளவிலேயே பயணிகள் பயணம் செய்கிறார்கள். கடந்த மாதம் 7–ந் தேதி முதல் 30–ந் தேதி வரை 3 லட்சத்து 60 ஆயிரம் பேர் பயணம் செய்தனர்.

மெட்ரோ ரெயிலில் பயணிகள் கூட்டம் குறைவாக இருப்பதால், அதிக வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. அவற்றை தவிர்க்க சேவைகளும் குறைக்கப்பட்டன.

இந்த நிலையில் தற்போது பயணிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கடந்த மாதத்தில் தினமும் 15 ஆயிரம் பேர் பயணம் செய்து வந்த நிலையில், அது இப்போது 27 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

### எண்ணிக்கை அதிகரிப்பு

மேலும் இந்த மாதத்தில் 15 நாட்களில் 3 லட்சத்து 75 ஆயிரம் பேர் பயணம் செய்து இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தற்போது அலுவலகங்களுக்கு பணிக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.

மேலும் மாநகர பஸ்களில் கூட்ட நெரிசல் அதிகமாக இருப்பதால், மெட்ரோ ரெயில் பயணத்தை நாடுகிறார்கள். இதற்கிடையில் மத்திய, மாநில அரசு ஊழியர்களுக்கு மின்சார ரெயிலில் பயணம் செய்ய சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனால் பெரும்பாலானவர்கள் மின்சார ரெயிலில் பணிக்கு செல்கிறார்கள். இதனால் மெட்ரோ ரெயிலில் கூட்டம் குறைவதற்கு வாய்ப்பு இருப்பாக தெரிகிறது.

ஆனாலும் விமானப் பயணிகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதால், மெட்ரோ ரெயிலில் பயணம் செய்வோர் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.